## தமிழ்நாட்டுக்கு பழனிசாமி செய்த துரோகங்கள் எத்தனை, எத்தனை?

# பழனிசாமியின் அரசியல் அத்தியாயம் 2026-தேர்தலோடு முடியப்போவது உறுதி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி காட்டமான அறிக்கை!

**சென்னை, மே 6-**

**“பா.ஜ.க. கூட்டணியிலிருந்து பழனிசாமி என்ன சாதித்தார் என பட்டியல் போடுவாரா? தமிழ்நாட்டுக்கு பழனிசாமி செய்த துரோகங்கள் எத்தனை எத்தனை! அதிகார அமைப்புகளுக்குப் பயந்து, பா.ஜ.க.வுடன் சேர்ந்த அமலாக்கத் துறை கூட்டணிதான் அ.தி.மு.க. கூட்டணி! பா.ஜ.க.வின் காலடியில் வீழ்ந்து அடிமை சேவகம் செய்யும் பழனிசாமியின் அரசியல் அத்தியாயம் 2026 தேர்தலோடு முடியப் போவது உறுதி!” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

“தி.மு.க.தான் காங்கிரஸ் மிரட்டலுக்குப் பணிந்தது. அதிமுக - பாஜக கூட்டணி மகிழ்ச்சியோடு அமைந்திருக்கிறது” எனப் பேசியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.

2004 முதல் 2014 வரை காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்த போது தமிழ்நாட்டிற்கு தி.மு.க. கொண்டு வந்த திட்டங்கள் ஏராளம். பாஜகவுக்கு சேவை செய்யவே நேரம் இல்லாத பழனிசாமிக்கு, திமுக கொண்டு வந்த திட்டங்கள் எல்லாம் எப்படி நினைவுக்கு வரும்?

**இந்தியா முழுமைக்கும் தி.மு.க. கொண்டு வந்த திட்டங்கள்!**

தமிழ் செம்மொழி பிரகடனம், மிகப் பெரிய போக்குவரத்து மேம்பாலங்கள், சேலத்தில் புதிய இரயில்வே மண்டலம், தாம்பரத்தில் தேசியச் சித்த மருத்துவ ஆய்வு மையம், சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு, திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம், கடல்சார் தேசியப் பல்கலைக் கழகம், இந்தியாவிலேயே முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான 3 ஜி தகவல் தொழில் நுட்பத் திட்டம், 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைப்பேசியில் பேசும் வசதி, நெசவாளர் சமுதாயத்தினர் நலனுக்காக சென்வாட் வரி நீக்கம், பொடா சட்டம் ரத்து, எனப் பத்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் பல திட்டங்களை திமுக கொண்டு வந்தது.

2,427 கோடி ரூபாய்ச் செலவில் சேது சமுத்திரத் திட்டம் கொண்டு வரப்பட்டுப் பாதிப் பணிகள் முடிந்த நிலையில் மோடி அரசு கிடப்பில் போட்டது. 1,650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகம் மதுரவாயல் இடையே பறக்கும் சாலைத் திட்டம் தொடங்கப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியில் முடக்கப்பட்ட அந்தத் திட்டத்தை மு.க.ஸ்டாலின் அரசு அமைந்த பிறகு புதுவடிவத்தை உருவாக்கி நிறைவேற்ற முயற்சிகள் எடுத்து பணிகள் நடந்து வருகின்றன.

**காவிரி நதிநீர் பிரச்சினைக்கு நடுவர் நீதிமன்றம்!**

மன்மோகன் சிங் ஆட்சிக்கு முன்பு வி.பி.சிங் ஆட்சியில் திமுக அங்கம் வகித்த போது கலைஞர் வலியுறுத்தியதால் மண்டல் பரிந்துரை ஏற்கப்பட்டு, மத்திய அரசின் வேலை வாய்ப்புகளில் 27 சதவீத இட ஒதுக்கீடு கிடைத்தது. காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்கப் பட்டது. சென்னை விமான நிலையத்தில் பன்னாட்டு முனையத்திற்கு அண்ணா பெயரும் உள்நாட்டு முனையத்திற்குக் காமராஜர் பெயரும் சூட்டப்பட்டது.

பழனிசாமி பாஜகவுடன் கூட்டணியில் இருந்து என்ன செய்தார்? எத்தனை திட்டங்களைக் கொண்டு வந்தார்? எனப் பட்டியல் போட முடியுமா? மாறாகத் தமிழ்நாட்டுக்கு துரோகங்களைத்தான் பழனிசாமி செய்தார்.



**ராஜ்பவனில் அடிமைப்பட்டுக் கிடந்த பழனிசாமி அரசு!**

ராஜ்பவனில் அடிமைப்பட்டுக் கிடந்தது பழனிசாமி அரசு. ஆளுநர்கள் வித்யாசாகர் ராவ், பன்வாரிலால் புரோகித் ஆகியோருக்குச் சேவகம் செய்து, மாநில உரிமையைப் பறிகொடுத்தார். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், உதய் மின் திட்டம், நீட் ஆகியவற்றை ஜெயலலிதா தீரத்தோடு எதிர்த்தார். அதனையெல்லாம் பழனிசாமியோ பயத்தோடு ஆதரித்தார். பிரதமர் மோடி ஜெயலலிதாவின் போயஸ் கார்டனுகே வந்தார். பழனிசாமி அமித்ஷா வீட்டிலேயே தவம் கிடந்தார்.

ஒன்றிய அரசின் சென்னைசேலம் இடையே எட்டு வழிச் சாலைக்காக, வனங்களையும், வயல்களையும் பலி கொடுக்கத் தயாரானார். காஸ், பெட்ரோல், டீசல் விலை உயர்ந்த போதெல்லாம் ஜெயலலிதாவிடம் இருந்து கடுமையாக அறிக்கை வரும். போராட்டம் நடத்துவார். ஆனால், பாஜகவின் பாதம் தாங்கியான பழனிசாமியிடம் இருந்து ஓர் அறிக்கையாவது வந்ததா?

**சூரப்பா விவகாரத்தில் சூரத்தனம் காட்டினாரா?**

அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தராக கர்நாடகாவைச் சேர்ந்த சூரப்பாவை ஆளுநர் பன்வாரிலால் புரோகித் நியமித்தார். தமிழர்களுக்குத் துணைவேந்தர் ஆகும் தகுதி கிடையாது என்று அவமானப்படுத்தப்படுத்தி, தமிழர்களின் தன்மானம் சீண்டப்பட்ட போது பழனிசாமி எதிர்த்து குரல் கொடுத்தாரா? துணை வேந்தர் நியமனம் தொடர்பாகச் சட்டப் போராட்டம் நடத்தி, இந்தியா முழுமைக்கும் அதிகாரம் பெற்றுத் தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போல சூரப்பா விவகாரத்தில் சூரத்தனம் காட்டினாரா பழனிசாமி?

ஆய்வு என்ற பெயரில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தனி ராஜ்ஜியம் நடத்திய போது அன்றைய எதிர்க்கட்சியான திமுக போராட்டங்களை நடத்தியது. ஆனால், முதலமைச்சர் பழனிசாமி எதிர்ப்பு காட்டாமல் பல்லிளித்துக் கொண்டிருந்தார். இப்படி எத்தனை எத்தனை துரோகங்கள். தலைவிக்குத் துரோகம் செய்துவிட்டு டெல்லி தலைமைக்குக் கட்டுப்படும் கோழை பழனிசாமி, மிரட்டல் பற்றியெல்லாம் பேச அருகதை இல்லை!

**அ.தி.மு.க. வரலாற்றின் கருப்புப் பக்கங்கள்!**

நீட் தேர்வை அனுமதித்து அப்பாவி ஏழை நடுத்தரக் குடும்பத்துப் பிள்ளைகளின் மருத்துவக் கனவை நாசமாக்கியது, தமிழ்நாட்டிற்குப் பாரபட்சமான நிதிப் பகிர்வு அளிக்கும் GST யை எந்தக் கேள்வியும் கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டது, குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்து முஸ்லிம்களின் முதுகில் குத்தியது, உழவர்களைப் பாதிக்கும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்து விவசாயிகளுக்குத் துரோகம் செய்தது, மாநில உரிமைகளைப் பறித்து ஒற்றை ஆட்சியைக் கொண்டு வரத் துடிக்கும் ஒன்றிய பாஜக அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்திற்கு ஆதரவு, கனிம வளச் சட்டத் திருத்த மசோதாவை ஆதரித்து மதுரை அரிட்டாபட்டியில் சுரங்க ஏலம் விடக் காரணமாக இருந்தது என மோடி அரசுக்குத் துணையாக நின்ற விஷயங்கள் எல்லாம் அதிமுக வரலாற்றின் கருப்பு பக்கங்கள்.

**நாடாளுமன்றத்தில் சாதித்தது என்ன? புள்ளி விவரம் சொல்லுவாரா?**

2019 - 2024 மோடி ஆட்சியில் திமுக கூட்டணி எம்.பி.க்கள் 9,695 கேள்விகளை ஐந்தாண்டில் மக்களவையில் எழுப்பினார்கள். 1,949 விவாதங்களில் பங்கெடுத்தார்கள். 59 தனிநபர் மசோதாக்களைக் கொண்டு வந்தார்கள். மாநில வாரியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாட்டில் தமிழ்நாட்டு எம்.பி.க்கள் 5ஆவது இடத்தில் இருந்தனர். கட்சிகள் வாரியாக கேள்விகள் எழுப்பியதில் திமுக 5வது இடத்தில் இடம் பெற்றது. நாடாளுமன்றத்தில் அதிமுக சாதித்தது என்ன? என பழனிசாமி புள்ளிவிவரம் சொல்லுவாரா?

நீட் தேர்வைத் திரும்பப் பெறத் தொடர் போராட்டம், மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தல், காவிரி, மேகதாட்டு பிரச்சினைகளில் தமிழ்நாட்டு உரிமையை விட்டுக் கொடுக்காமல் போராடியது, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகக் குரல், ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ரத்துக்கு எதிர்ப்பு, மூன்று வேளாண்மை சட்டங்களை எதிர்த்தது, புதிய கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு எனத் தமிழ்நாட்டு உரிமைக்காக திமுக தொடர்ந்து போராடி வருகிறது.

**தி.மு.க.வைப் பற்றிப் பேச பழனிசாமிக்கு திராணி கிடையாது!**

இப்படி எதற்கும் குரல் கொடுக்காத பழனிசாமி, தமிழகத்தின் உரிமைகளுக்கும், தமிழக மக்களின் நலனுக்கும் அயராது போராடி வரும் திமுகவை பற்றிப் பேச என்ன திராணி இருக்கிறது? தனது குடும்பத்தைக் காப்பாற்ற மோடி அரசின் அதிகார அமைப்புகளுக்குப் பயந்து, பாஜகவுடன் சேர்ந்த அமலாக்க துறை கூட்டணிதான் அ.தி.மு.க. கூட்டணி.

”அதிமுக - பாஜக கூட்டணி மகிழ்ச்சியோடு அமைந்திருக்கிறது’ என்கிறார் பழனிசாமி. கூட்டணி அறிவிப்பை அமித்ஷா வெளியிட்ட போது பக்கத்தில் பொம்மையாக அமர்ந்திருந்த பழனிசாமி மகிழ்ச்சி பற்றியெல்லாம் பேசுவது வேடிக்கை. கூட்டணி மகிழ்ச்சி என்றால் பட்டாசு வெடித்துக் கொண்டாட வேண்டியதுதானே! ஏன் செய்யவில்லை? ’பா.ஜ.க.வுடன் இனி கூட்டணி இல்லை’ எனப் பேசிய பச்சைப்பொய் பழனிசாமி எந்த வெட்கமும் இல்லாமல் பாஜகவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு பேசும் வீர வசனங்களைக் கோமாளியின் உளரல்களாகத்தான் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கிறார்கள்.

**சுயநல பச்சோந்திகளுக்கு தமிழ்நாட்டில் இடமில்லை!**

ஒன்றிய பா.ஜ.க.வின் காலடியில் தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்து தமிழ்நாட்டைச் சீர்கெடுத்த ஆட்சிதான் அதிமுக பாஜக ஆட்சிகள். இந்தத் துரோகக் கூட்டணிக்குக் கடந்த தேர்தல்களிலேயே தமிழ்நாட்டு மக்கள் தோற்கடித்துத் தக்கப் பதிலடி கொடுத்தனர். வரும் சட்டமன்றத் தேர்தலிலும் இந்த அடிமை அமலாக்க துறை கூட்டணியை மக்கள் ஓட ஓட விரட்டி அடிப்பார்கள்.

சுயநலப் பச்சோந்திகளுக்குத் தமிழ்நாட்டில் என்றுமே இடமில்லை. பாஜகவின் காலடியில் வீழ்ந்து அடிமை சேவகம் செய்யும் பழனிசாமியின் அரசியல் அத்தியாயம் 2026 சட்டப்பேரவைத் தேர்தலோடு முடியப் போவது உறுதி!

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு

# சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் 29 இடங்களில் நடத்த முடிவு!

### கரூர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

*கரூர், மே 6-*

*நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு, சாதனை விளக்க பொது கூட்டங்கள் 29 இடங்களில் நடத்துவது என வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்ற நடைபெற்ற கரூர் மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.*

*கரூர் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.*

*கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பி.வி.பரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிர மணி, என்.செல்வராஜ், கழக பொதுக் குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி. சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*



*கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-*

*1. இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி, ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரப் போக்கிலிருந்து அரசியல்சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாதுகாக்கும் முதன்மையான மாநில அரசாகவும், நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற தமிழ்நாடு முதலமைச்சராகவும், இந்தியாவிற்கே ரோல் மாடலாக தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.*

*அரசியல் சட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக ஆளுநரின் கையெழுத்தின்றி உச்சநீதிமன்றமே ஒப்புதல் அளித்துச் சட்டம் இயற்றும் அதிகாரத்தைத் தனது சட்டப் போராட்டம் மூலம் பெற்று, ஆளுநர் அடாவடியாக நிறைவேற்ற மறுத்த பத்து மசோதாக்களைச் சட்டமாக்கி சகாப்தம் படைத்து, “சட்டம் இயற்றும் அதிகாரம் சட்ட மன்றத்திற்கே” “மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத்தான், நிச்சயமாக ஆளுநருக்கு இல்லை” என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று, தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டியது மட்டுமின்றி, இந்தத் தீர்ப்பின் மூலம், இந்தியக் கூட்டாட்சி வரலாற்றில் அனைத்து மாநிலங்களுக்குமான உரிமைகளைப் பெற்றுத் தந்த கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.*

*ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கும் துணையாகச் செயலாற்றி வரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், இக்கூட்டம் வாழ்த்தும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறது.*

*மக்களை முன்னேற்றும் முத்திரைத் திட்டங்களான ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’, ‘மகளிர் விடியல் பயணத் திட்டம்’, ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’, ‘புதுமைப்பெண் திட்டம்’, ‘தமிழ் புதல்வன் திட்டம்’, ‘நான் முதல்வன் திட்டம்’, ‘அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’, ‘இல்லம் தேடிக் கல்வி’, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ 1.81 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு என அனைத்துத் திட்டங்களும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கும் முன்னோடியாகத் திகழ்வதை மற்ற மாநிலங்கள் கூட இன்று திரும்பிப் பார்க்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக அரசின் இந்தச் சாதனைகளைப் பகுதி, ஒன்றிய, நகர அளவில், “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு!” சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களை நடத்திடுவதென மாவட்டக் கழகச் செயலாளர்களின் கூட்டத்தில் முடிவு செய்தபடி கரூர் மாவட்ட தி.மு.க சார்பில் கரூர் மாவட்டத்தில் 6 பகுதி கழகம், 20 ஒன்றிய கழகம், 3 நகரக் கழகம் உள்பட 29 இடங்களில் நடத்தப்படும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது. என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.*

---

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு’ சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!



## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 'நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு' என்ற தலைப்பில் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று அறிவிப்புக்கு இணங்க புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

**நாடு போற்றும் நான்காண்டு**

**தொடரட்டும் பல்லாண்டு**

**தி மு க அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்**

| வ.எ | நாள் | ஒன்றியம் | பேச்சாளர் | செல் நம்பர் |
|---|---|---|---|---|
| 1 | 08.05.2025 | திருமயம் தெற்கு | திரு.இனியன் அமுதன் | 90807 47878 |
| 2 | | அரிமளம் வடக்கு | திரு.சு.பாலகிருஷ்ணன் | 98430 17405 |
| 3 | | மணமேல்குடி தெற்கு | திருமதி.தஞ்சை கலைமணி பாரதி | 98653 33354 |
| 4 | 09.05.2025 | திருவரங்குளம் கிழக்கு | திரு.இனியன் அமுதன் | 90807 47878 |
| 5 | | அரிமளம் தெற்கு | திரு.பாலக்கரை டி.கோவிந்தன் | 97159 38728 |
| 6 | | அறந்தாங்கி தெற்கு | திரு.வயலூர் கா.கிருஷ்ணமூர்த்தி | 99765 96810 |
| 7 | 10.05.2025 | திருமயம் வடக்கு | திரு.சு.பாலகிருஷ்ணன் | 98430 17405 |
| 8 | | அறந்தாங்கி நகராட்சி | திருமதி.தஞ்சை கலைமணி பாரதி<br>திரு.சு.சுகநிலவன் | 98653 33354<br>95978 93920 |
| 9 | | ஆவுடையார்கோவில் வடக்கு | திரு.தீக்கனல்.என்.செல்வம் | 97902 23332 |
| 10 | | அறந்தாங்கி மேற்கு | திரு.A.சிவா.(எ)சிவக்குமார் | 99443 51892 |
| 11 | 11.05.2025 | பொன்னமராவதி வடக்கு | திரு.பாலக்கரை டி.கோவிந்தன் | 97159 38728 |
| 12 | | அறந்தாங்கி கிழக்கு | திரு.A.சிவா.(எ)சிவக்குமார் | 90807 47878 |
| 13 | | ஆவுடையார்கோவில் தெற்கு | திரு.வயலூர் கா.கிருஷ்ணமூர்த்தி | 99765 96810 |
| 14 | 12.05.2025 | பொன்னமராவதி தெற்கு | திரு.முகமது இலியாஸ் | 99943 62600 |
| 15 | | மணமேல்குடி வடக்கு | திரு.தீக்கனல்.என்.செல்வம் | 97902 23332 |
| 16 | | திருவரங்குளம் மேற்கு | திருமதி.தஞ்சை கலைமணி பாரதி | 98653 33354 |
| 17 | 13.05.2025 | திருவரங்குளம் தெற்கு | திரு.முகமது இலியாஸ் | 99943 62600 |

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.